# உய்யக்கொண்டார்
# வாழி திருநாமம்

எந்தாதை நாதமுனி இணை அடியோன் வாழியே
　ஏராரும் சித்திரையில் கார்த்திகையான் வாழியே
நந்தாமல் நாதமுனி நலம் புகழ்வோன் வாழியே
　நாலிரண்டும் ஐயைந்து நன்றளித்தான் வாழியே
செந்தாதார் வெள்ளறையில் சிறக்க வந்தோன் வாழியே
　சேம மணக்கால் நம்பிக்கு அருள் புரிந்தோன் வாழியே
சந்தாமல் தரிசனத்தை விளங்குவித்தான் வாழியே
　தேசுறும் உய்யக்கொண்டார் சேவடிகள் வாழியே

---